**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.155/2019</u>**

பெயர்-திரு. சுசீலாபாய் நாள்.11.08.2025

பி.வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.2 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1.சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வழக்கறிஞர் வரச்சொல்லி வந்தேன். சாம்ராஜ் நகர், மூகன் பாளையத்தில் குடியிருப்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாக்கல் செய்யாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. நதியா அவரது கணவர் இறந்ததற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். முழுவிபரம் எனக்கு தெரியாது விபத்து நடந்துள்ளதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அழகுமணி என்றா நதியாவிற்கும் சௌந்தர் ராஜன் என்பவருக்கும் எந்த தேதியில் திருமணம் ஆனது என்றால் எனக்கு தெரியாது. எந்தனை ஆண்டுகள் அவர்கள் சேர்ந்து குடும்பம் நடத்தினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி நதியாவிற்கு சௌந்திராஜனுடன் எந்த வயதில் திருமணம் ஆனது என்றால் எனக்கு தெரியாது. நதியாவிற்கு 16 வயதில் திருமணம் ஆனது என நதியா சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் நான் நதியா 10வது முடித்து 2 ஆண்டுகள் கழித்து திருமணமானதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2.மூகன் பாளையத்தில் உள்ள ஜலபதி என்பவர் எனக்கு தெரியாது. ஜலபதிற்கும், நதியாவிற்கும் திருமணம் ஆகி குடும்பம் நடத்திய விபவரம் எனக்கு தெரியாது. நதியா ஜலபதி மீது குடும்ப பிரச்சணைக்காக சாம்ராஜ் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. நதியா வாரிசு சான்று வாங்கிய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. ஜலபதியிடம் பிரச்சணை ஏற்பட்டு அவரை விவாகரத்து செய்யாமல் வேறு நபரை திருமணம் செய்த விபரம் எனக்கு தெரியாது நான் நதியாவிற்கு அத்தை முறை ஆவேன். நதியா இறந்த சௌந்தராஜனுக்கு சட்டப்படியான மனைவி என்றால் சரியல்ல. நதியாவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.08.11 17:10:19 +0530

District Munsif